Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.909/2025

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.கண்ணன் | Occupation | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Father’s name | காளியப்பன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of April 2026.

18.04.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் போக்குவரத்து காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.03.2025 அன்று திருவில்லிபுத்தூர் மதுவிலக்குஅமலாக்க பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது காலை 07.00 மணிக்கு நானும் தகா1034 ரமேஷ், தகா2887 ரமேஷ், மத்திய நுண்ணறிவு பிரிவு சிவகங்கை தகா.302 பாஸ்கர், மத்திய நுண்ணறிவு பிரிவு சிவகங்கை தகா.2261 சுதாகர், மத்திய நுண்ணறிவு பிரிவு சிவகங்கை தகா.372 வினோத்கண்ணன் ஆகியோர்களுடன் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து சென்றபோது கிடைத்த ரகசிய தகவலின்படி காலை 07.45 மணிக்கு திருவில்லிபுத்தூர் புதிய பேருந்துநிலையம் அருகிலுள்ள டாஸ்மாக் கடை அருகே நின்றுகொண்டிருந்த பின்னால் விசாரித்து தெரிந்த சோனைமுத்தையா வயது 46 த/பெ.சின்னராமர் அய்யம்பட்டி தேவர் தெரு திருவில்லிபுத்தூர் என்பவர் வெள்ளை பையுடன் நின்றுகொண்டு அங்கிருந்தவர்களிடம் பணம் பெற்று மதுபான பாட்டில்களை விற்றுக்கொண்டிருந்தார். எங்களை கண்டவுடன் அங்கிருந்தவர்கள் ஓடிவிட்டார்கள். எங்களை பார்த்து ஓட எத்தனித்த சோனைமுத்தையாவை சோதனை செய்தபோது அவர் வைத்திருந்த வெள்ளை சாக்கு பையில் 53 மதுபான பாட்டில்கள் மற்றும் மதுபானம் விற்ற பணம் ரூ.350/- ஐ வைத்து அதை எங்களிடம் ஆஜர்

படுத்தினார். மதுபானம் வைத்திருந்து விற்ற குற்றத்திற்காக 08.30 மணிக்கு சோனைமுத்தையாவை கைது செய்தும் பின்பு அவரை விசாரிக்க தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் தான் லோடுமேன் வேலை செய்து வருவதாகவும் இரவு நேரத்தில் டாஸ்மாக்கில் மதுபானம் குறைந்த விலைக்கு வாங்கி டாஸ்மாக் மூடிய காலை வேலையில் அதிக விலைக்கு விற்று வந்தேன் என்று 09.00 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பின்பு அவர் வைத்திருந்த 180 எம்எல் அளவுள்ள டயமண்ட் ரம் மதுபான பாட்டில்கள் 16 எண்ணம், 180 எம்எல் அளவுள்ள எக்ஸ்பிரஸ் பிராந்தி 37 எண்ணம், மதுபானம் விற்று வைத்திருந்த பணம் ரூ.350/- ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றி அத்தாட்சியில் அங்கிருந்த தனிநபர்கள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால் போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே அத்தாட்சியில் கையொப்பம் செய்து எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து 10.00 மணிக்கு எதிரி சோனைமுத்தையா மீது திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு குற்ற எண்.23/2025 பிரிவு.4(1)(C) 4(1)(A) TNP Amendment Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அத்தாட்சி அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அசா.1 ன் கையெழுத்து அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் மேல் விசாரணைக்கு காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

இவ்வழக்கின் எதிரியை எத்தனை மணிக்கு கைது செய்தோம் என்றால் 08.30 மணியளவில் கைது செய்தோம். கைது குறிப்பாணையில் இவ்வழக்கின் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் எதிரியை கைது செய்தபோதே குற்ற எண் கொடுக்கப்பட்டதா என்றாலும் எதிரியை கைது செய்து நிலையம் அழைத்து வந்து பின்னர் கைது குறிப்பாணை தயார் செய்யப்பட்டது. மேற்படி கைது குறிப்பாணையானது காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு கணினியில் ஏற்றப்பட்டது பற்றி இவ்வழக்கில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட அத்தாட்சி எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் அத்தாட்சி படிவத்தில் இவ்வழக்கு சங்கதிகளை சம்பவயிடத்தில் வைத்து பூர்த்தி செய்தோம். இவ்வழக்கு சம்பவம் பற்றி கிடைத்த தகவல் பற்றி பொதுநாட்குறிப்பேட்டில்

குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ரகசிய தகவல் என்பதால் அதுபற்றி குறிப்பிடப்படவில்லை. மேற்படி ரகசிய தகவலாளியை சம்பவயிடத்திற்கு அழைத்து சென்றோமா என்றால் இல்லை. நாங்கள் சம்பவயிடத்திற்கு சென்றபோது அங்கிருந்து எத்தனை நபர்கள் ஓடினார்கள் என்றால் கூட்டமாக இருந்தார்கள் எத்தனை நபர்கள் என்று நான் எண்ணவில்லை. சம்பவயிடத்தில் மதுபானம் குடித்த காலி பாட்டில்கள் இருந்ததா என்றால் சம்பவயிடத்தில் மதுபான காலி பாட்டில்கள், ஸ்நாக்ஸ், மற்றும் ஊறுகாய் போன்றவை இருந்தது ஆனால் அவை இவ்வழக்கிற்கு தேவைப்படாததால் கைப்பற்றவில்லை.

சம்பவயிடத்தில் தான் அரசிற்கு பாத்தியப்பட்ட டாஸ்மாக் கடை இயங்கி வருகிறது என்றால் சரிதான். உண்மையில் எதிரி டாஸ்மாக் கடை அருகே மதுபானம் விற்றிருந்தால் டாஸ்மாக் கடையில் வேலை செய்யும் ஊழியர்களே எதிரி மீது புகார் கொடுத்திருப்பார்கள் என்றால் டாஸ்மாக் கடை பூட்டியிருந்த சமயத்தில் எதிரி மதுபானங்களை விற்றார் அதனால் அவர்கள் புகார் எதுவும் கொடுக்கவில்லை. சம்பவம்பற்றி மேற்படி டாஸ்மாக் கடையிலிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை பார்வையிட்டோமா என்றால் இவ்வழக்கிற்கு தேவைப்படாததால் அதனை பார்வையிடவில்லை. உண்மையில் மேற்படி கண்காணிப்பு கேமரா பதிவுகளை பார்த்திருந்தால் உண்மையில் எதிரி மதுபானங்கள் விற்றாரா என்பது தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி கண்காணிப்பு கேமராவை ஆய்வு செய்தார் எதிரி மதுபானம் விற்கவில்லை என்பது தெரியவந்திருக்கும் என்பதால் அது இவ்வழக்கிற்கு தேவையில்லை என்று நான் கூறியுள்ளேன் என்றால் நாங்கள் நேரடியா எதிரியிடம் பணமும் மதுபான பாட்டில்களையும் கைப்பற்றியதால் கண்காணிப்பு பதிவுகளை பார்வையிட வேண்டிய தேவை ஏற்படவில்லை. சம்பவயிடத்தில் இருந்த பொருட்களை நாங்கள் புகைப்படம் எடுத்தோமா என்றால் நாங்கள் யாரும் செல்போன் கொண்டு செல்லாதால் புகைப்படம் எடுக்கவில்லை.

எனது வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் சம்பவயிடத்திற்கு நாங்கள் எவ்வாறு சென்றோம் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. இருசக்கர வாகனத்தில் சென்று சம்பவயிடத்திலிருந்து சிறிது தூரத்திற்கு முன் வாகனத்தை நிறுத்திவிட்டு சம்பவயிடத்திற்கு நடந்து சென்றோம். சம்பவயிடத்திற்கு எத்தனை காவலர்கள் சென்றோம் என்றால் 6 காவலர்கள் சென்றோம். அத்தனை

காவலர்கள் இருந்தும் சம்பவயிடத்திலிருந்த நபர்களை பிடிக்க இயலவில்லையா என்றால் எங்களை சற்று தொலைவில் பார்த்தவுடனேயே அங்கிருந்த நபர்கள் ஓடிவிட்டனர். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அத்தாட்சியின் அடிப்படையில் இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையில் எதிரி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறிய வாக்கியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சம்பவயிடம் அருகிலிருந்த டாஸ்மாக் கடையின் எண் இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இவ்வழக்கிற்கு தேவைப்படாததால் அதுபற்றி குறிப்பிடப்படவில்லை. சம்பவயிடத்தை காட்டக்கூடிய பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்பட்டதா என்றால் எதிரியிடமிருந்து நேரடியாக மதுபானம் மற்றும் பணம் கைப்பற்றப்பட்டதாலும் இவ்வழக்கின் புலன் விசாரணைக்கு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தேவைப்படாததாலும் அதனை தயார் செய்யவில்லை. மேற்படி மதுபானங்கள் மூடிய நிலையிலிருந்தது. மேற்படி மதுபான பாட்டில்கள் அது எந்த மதுபானக்கடையில் வாங்கப்பட்டது என்பது பற்றி சீல் பொறிக்கப்பட்டிருந்ததா என்றால் எதிரியே தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் டாஸ்மாக் கடையில் முந்தைய தினமே வாங்கி விற்பனைக்கு வைத்திருப்பதாக கூறியதால் அதுபற்றி விசாரணை செய்யவில்லை.

எனது வாக்குமூலத்தில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை கூறியுள்ளேன் என்றால் அவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாலும் காவல் ஆய்வாளர் சம்பவயிடத்தில் என்ன நடந்தது என்று கேட்டதாலும் அதுபற்றி கூறினேன். அத்தாட்சியில் சம்பவயிடத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே அத்தாட்சியில் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். அது வழக்கிற்கு தேவைப்படாததால் குறிப்பிடப்படவில்லை. ஆனால் அதுபற்றி எனது வாக்குமூலத்தில் காவல் ஆய்வாளரிடம் கூறினேன். பொதுவாக பார்க்காத ஒரு சங்கதிகளை பார்த்ததாக கூற இயலாது என்றால் சரிதான். அதை போல் சொல்லாத சங்கதிகளை சொன்னதாக சொல்லி வாக்குமூலம் கொடுக்க முடியாது என்றால் சரிதான். அத்தாட்சியிலுள்ள சங்கதிகளின் அடிப்படையில் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அத்தாட்சியில் தனி நபர் சாட்சிகள் இல்லாததால் போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே கையெழுத்து செய்ததாக

குறிப்பிடாமல் அதுபற்றி பின்னர் முதல் தகவல் அறிக்கை மற்றும் எனது வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அப்போது முதல் தகவல் அறிக்கையில் அதுபற்றி குறிப்பிட வேண்டிய தேவை ஏற்பட்டதால் குறிப்பிட்டுள்ளேன். ஒப்புதல் வாக்குமூலம் யார் எழுதினார்கள் என்றால் எனக்கு கையில் அடிபட்டிருந்ததால் நான் சொல்ல சொல்ல என்னுடன் வந்த சக காவலர் எழுதினார். எனக்கு கையில் அடிபட்டிருப்பதால் மற்றொரு காவலர் எழுதியதாக ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி வழக்கிற்கு தேவைப்படாததலால் அதுபற்றி குறிப்பிடப்படவில்லை. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் எழுதிய நபரிடம் கையெழுத்து பெறப்படவில்லை என்றாலும் அவரது பெயர் குறிப்பிடப்படவில்லை என்றாலும் அதுபற்றி வழக்கிற்கு தேவைப்படாததலால் அதுபற்றி குறிப்பிடப்படவில்லை. நான் சொல்ல சொல்ல அவர் எழுதியதாக ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி வழக்கிற்கு தேவைப்படாததலால் அதுபற்றி குறிப்பிடப்படவில்லை. மேற்படி சம்பவத்தன்று காலை 08.30 மணியளவில் எதிரியை கைது செய்தது தொடர்பான ஆவணங்கள் எதுவும் சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றால் கைது குறிப்பாணை மற்றும் கைது சம்மந்தமான ஆவணங்களை கணினியில் ஏற்ற வேண்டியிருப்பதால் குறிப்பு எடுத்து வந்து காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தோம். மேற்படி கைது சசம்மந்தமான ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதால் எதிரியை சம்பவயிடத்தில் வைத்து கைது செய்து அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற இயலாது என்றால் எதிரியிடம் சம்பவயிடத்தில் வைத்து மதுபான பாட்டிலும் மதுபானம் விற்ற பணமும் இருந்ததால் கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்து எதிரி தானாக சொன்னதால் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்தாட்சியை என்னுடன் வந்த காவலர் ஒருவர் நான் சொல்ல சொல்ல தயார் செய்தார். அவரது பெயர் தற்போது எனக்கு நியாபகமில்லை. மேற்படி எனக்கு கையில் அடிபட்டிருந்தது பற்றியும் அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் போன்ற ஆவணங்கள் நான் தயார் செய்யவில்லை என்பதையும் வேறு ஒரு காவலர் தயார்செய்தார்என்பதையும் நான் வாக்குமூலத்தில் குறிப்பிடாததால் நான் பொய்யான வாக்குமூலத்தை காவல் ஆய்வாளரிடம் கொடுத்துள்ளேன் என்றாலும் வழக்கின் விசாரணைக்கு தேவைப்படாததால் மேற்படி சங்கதிகள் பற்றி எனது வாக்குமூலத்தில்

குறிப்பிடவில்லை. வாக்குமூலத்தில் பொய்யான சங்கதிகளை காவல் ஆய்வாளரிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வாக்குமூலத்தில் நான் எழுதியதாக நான் கூறவில்லை மேற்படி ஆவணங்களை நான் தயார் செய்ததாகத்தான் நான் குறிப்பிட்டுள்ளேன். இவ்வழக்கின் ஆவணங்களை 22.03.2025 அன்று காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

எதிரி யாருக்கும் மதுபானம் விற்றதாகவோ எதிரியிடம் யாரும் மதுபானம் வாங்கியதாகவோ எந்தவித வாசகமும் எனது வாக்குமூலத்தில் இடம்பெறவில்லை என்றால் அங்கிருந்த நபர்கள் எங்களை கண்டதும் ஓடிவிட்டதால் அவர்களின் பெயர்கள் குறிப்பிடவில்லை. மேற்படி புது பேருந்துநிலையமானது போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் நிறைந்த பகுதி என்றால் அது புதிதாக கட்டிக்கொண்டிருக்கும் பேருந்துநிலையம் என்பதால் ஆட்கள் நடமாட்டம் அவ்வளவாக இல்லை. மேற்படி சம்பவ சமயத்தில் சம்பவயிடம் வழியாக வேலைக்கு செல்வோரும் கல்லூரிக்கு செல்வோரும் செல்வார்கள் என்றால் சரியல்ல. பிரதான சாலையிலிருந்து மேற்படி டாஸ்மாக் கடையானது சுமார் 1/2 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும். எதிரியிடம் சம்பவத்தன்று யார் எவ்வளவு பணம் கொடுத்து மதுபானம் வாங்கினார்கள் என்றால் நாங்கள் தூரத்திலிருந்ததால் அதுபற்றி தெரியவில்லை. இவ்வழக்கில் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் அத்தாட்சியின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன். இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக காவல்நிலையத்தில்வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கானது புள்ளிவிவரத்திற்காக எதிரி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் வழக்கு சொத்துக்களுக்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சொத்துக்களை காவல் ஆய்வாளர் தான் கைப்பற்றியிருக்க வேண்டும் என்றாலும் அதனை கைப்பற்ற எனக்கு அதிகாரம் இல்லை என்றாலும் காவல் ஆய்வாளர் உத்தரவின்பேரில் கைப்பற்றினேன். எதிரியிடமிருந்து அவரது செல்போன் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. சம்பவயிடத்தில் என்னிடமோ எதிரியிடமோ செல்போன் எதுவும் இல்லை என்பதால் நான் காவல் ஆய்வாளரிடம் உத்தரவு பெற்றிருக்க முடியாது என்றால் சிவகாசி ரோட்டில் சென்ற ஒரு நபரிடம் செல்போன் பெற்று காவல் ஆய்வாளரிடம் உத்தரவு

பெற்றேன். அதுபற்றி இவ்வழக்கு ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி இவ்வழக்கிற்கு தேவைப்படாததால் குறிப்பிடப்படவில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.